செ.வெ.எண்.60 நாள்.22.03.2017.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், மானாபரநல்லூர் கிராமத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் 29 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

-------

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், மானாபரநல்லூர் கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் சிறப்பு மனுநீதி நாள் முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.03.2017) நடைபெற்றது.

இம்முகாமில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை வேண்டி 42 மனுக்களையும், பட்டா மாற்றம் வேண்டி 6 மனுக்களையும், குடும்ப அட்டை வேண்டி 5 மனுக்களையும், வறட்சி நிவாரணம் வேண்டி 41 மனுக்களையும், நில அளவை பிரிவு தொடர்பாக 2 மனுக்களையும், புதிய குடும்ப அட்டை வேண்டி 5 மனுக்களையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் 3 மனுக்களையும், மாவட்ட வேலைவாய்புத் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் மின்வாரியத் துறை ஆகிய துறைகளின் மூலம் தலா ஒரு மனுக்களையும், வட்டார வளர்ச்சித் துறையில் 10 மனுக்கள் உள்பட 112 பல்வேறு மனுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

முகாமில், வேளாண்மைத் துறையின் மூலம் 3 விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான், தெளிப்பு நீர் பாசன கருவி மற்றும் தெளிப்பு மானியம் உள்பட ரூ.14 ஆயிரத்து 700/—த்திற்கான காசோலைகளையும், மானாபரநல்லூர் கிராமம், தென்திருப்புவனம் கிராமத்தைச் சார்ந்த 8 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகளையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், மாவட்ட வழங்கல் துறையின் மூலம் 2 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டையினையும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 4 விவசாயிகளுக்கு உலர் தீவனங்களையும், தோட்டக்கலைத் துறையின் மூலம் 4 பயனாளிகளுக்கு நாற்றங்காலையினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது—

திருநெல்வேலி மாவட்டத்தில் வழக்கமாக பெய்ய வேண்டிய பருவமழை 52 சதவிதம் குறைவாக பெய்துள்ளது. இதன் காரணமாக மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இதனை கருத்தில் கொண்டு, வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறைகளின் மூலம் கணக்கிடப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வறட்சி நிவாரணத் தொகையாக ரூ.32.038 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு மக்கள் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பெண்களுக்கு 50 சதவிதம் மானியத்தில் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கு உதவித் தொகை ரூ.12 ஆயிரத்திலிருந்து, ரூ.18 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. திருமண உதவித் தொகையுடன் தாலிக்கு வழங்கும் திட்டத்தில் 10ம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25 ஆயிரம் மற்றும் நான்கு கிராம் தங்கத்திலிருந்து எட்டு கிராம் தங்கமாகவும், பட்டம் மற்றும் பட்டயம் படித்த பெண்களுக்கு ரூ.50 ஆயிரம் மற்றும் நான்கு கிராம் தங்கத்திலிருநாது எட்டு கிராம் தங்கமாகவும் வழங்கப்படவுள்ளது. மேலும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை இருமடங்காக உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பின் மூலம் 101 குடிமராமத்து பணிகள் ரூ.6.14 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. தாய் திட்டத்தின் மூலம் 42 கண்மாய்கள் ரூ.892 இலட்சத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் குளக்கரை பதப்படுத்துல், மதகுகளின் கதவுகளை சீர் செய்தல், குளக்கரையில் உள்ள வழிந்தோடிகள் மற்றும் பள்ளங்களை சீர் செய்து குளங்களை தூர் வாருதல், சீமை கருவேல மரங்களை வேருடன் அழித்தல் போன்ற பணிகளை செய்வதன் மூலம் மழைக்காலங்களில் அதிகளவு நீர் சேமிக்க வாய்ப்புள்ளது. தமிழக அரசு பொதுமக்களுக்கு அறிவித்து வரும் இதுபோன்ற பல்வேறு திட்டங்களை பயன்பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.விஜயலெட்சுமி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.கனகராஜ், மாவட்ட வழங்கல் துறை அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சத்தியநாராயணன், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் திரு.ஆர்.ராஜேந்திரன், மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உள்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.